பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ ...: 1953 ★ ... ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஐப்பசி 14 (30—10—72) திங்கள் வெளியூர்: ஐப்பசி 15 (31—10—72) செவ்வாய் [இதழ்: 113

என்றுமில்லாத விலைவாசி உயர்வு

புதுடில்லி, அக். 30—

கடந்த மூன்று திங்களில் விலைவாசிகள் 10 புள்ளிகள் உயர்ந்திருக்கின்றன.

சூன் திங்கள் இறுதியில் விலைவாசி 197 புள்ளியாக இருந்தது; கடந்த செப்டம்பரில் இது 207 புள்ளியாக உயர்ந்திருக்கிறது; மிகக் குறுகிய காலத்தில் இந்த அளவுக்கு விலைவாசி இதற்கு முன்பு உயர்ந்தது கிடையாது.

விலைவாசிப் புள்ளி என்பது 1962-ம் ஆண்டு விலைவாசி நிலவர அடிப்படையில் 100 புள்ளி என்று கொண்டு கணக்கிடப்படுவதாகும்.

கைத்தறியாளர் துயர் துடைக்கக் கழகம் மேற்கொண்ட நடவடிக்கை

ஒரு நாள் விற்பனை ரூ. 50 இலட்சம்

—★—

தமிழகம் முழுதும் தலைவர்கள் விற்றனர்

சென்னை, அக். 30—

கைத்தறி நெசவாளர் துயர் துடைக்கும் நோக்கத்துடன் கழகத்தவர் கைத்தறித் துணிகளை விற்பனை செய்ய வேண்டும் என்ற கழகப் பொதுக்குழு முடிவிற்கேற்ப நேற்று தமிழகம் முழுவதிலும் கைத்தறி விற்பனை நடைபெற்றது.

கழகத் தலைவர்கள்—அமைச்சர் பெருமக்கள்—கழக முன்னணித் தோழர்கள் அனைவரும் ஆங்காங்கு கைத்தறித் துணி விற்பனையில் ஈடுபட்டனர். பொதுமக்கள் ஆர்வத்துடன் கைத்தறித் துணிகளை வாங்க முன்வந்து கழகத்தின் முயற்சிக்குப் பேராதரவு நல்கினர்.

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் சேலத்திலும், பொதுச்செயலாளர் நாவலர் அவர்கள் மதுரையிலும் கைத்தறித் துணி விற்றனர்; அமைச்சர் பேராசிரியர் சென்னை நகரில் விற்பனை செய்தார்; மற்ற அமைச்சர்கள் தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களில் கைத்தறி விற்பனையில் ஈடுபட்டனர்.

நேற்று ஒருநாளில் மட்டும் தமிழகம் முழுவதிலும் ரூ 50 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகளைக் கழகத்தவர் விற்றிருக்கின்றனர்; விவரம் வருமாறு:—

சேலத்தில் கலைஞர்

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் சேலத்தில் கைத்தறித் துணி விற்றார்; அம்மாப்பேட்டை காந்தி மைதானத்தில் காலை 9.30 மணிக்கு துணி விற்பனை தொடங்கியது.

விற்பனை தொடங்குவதற்கு முன்பே துணி வாங்குவதற்காக ஆண்களும்—பெண்களும் திரளாகக்கூடி நின்றனர்; அவர்கள் விரும்பிய துணியை எடுத்துக் கொடுத்து—கலைஞர் விற்பனை செய்தார்.

ஒவ்வொரு இடத்திலும் மக்கள் பெருந்திரளாகக் கூடி நின்று துணிகள் வாங்கினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.ஆர். கிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர் கே. செயராமன், நகராட்சித் துணைத் தலைவர் அமானுல்லாகான், நகராட்சி உறுப்பினர்கள் மாரியப்பன், துரைசாமி, மாவட்ட தி. மு. க. துணைச் செயலாளர் அன்புக்கரசு, ஊராட்சி ஒன்றியத் தலைவர் வெங்கடாசலம் ஆகியோர் முதலமைச்சருடன் சென்றார்கள்.

சுமார் ரூ. 4 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனை ஆயின.

மதுரையில் நாவலர்

மதுரையில் பொதுச் செயலாளர் நாவலர் அவர்கள் கைத்தறி ஆடை விற்பனையைத் தொடங்கினார்.

செல்லூரில் காலை 10 மணியளவில் விற்பனையைத் தொடங்கி மதுரை நகரின் முக்கியப் பகுதிகள் அனைத்திலும் மாலை 4.30 மணி வரை நடத்தினார்; பொதுமக்கள் துணிகளைத் தலைவர்கள் மூலம் பெற ஆர்வத்துடன் போட்டி போட்டு வாங்கினர்.

நாவலருடன் மதுரை மேயர்முத்து அவர்களும் கைத்தறித் துணி விற்பனையில் ஈடுபட்டார்.

ரூ. 7.75 இலட்சம் மதிப்புள்ள துணிகள் விற்பனை ஆயின.

சென்னையில் பேராசிரியர்

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமையில் சென்னை நகர் முழுவதும் தெருத் தெருவாக கைத்தறித் துணி விற்பனை நடைபெற்றது; இதன் மூலம் நேற்று ரூ. 8 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனை ஆயின.

பேராசிரியருடன் இராம அரங்கண்ணல் எம்.எல்.ஏ., முரசொலி மாறன் எம்.பி., மு. வேதாசலம் எம்.எல்.ஏ., ஆற்காடு வீராசாமி எம்.எல்.ஏ., சிட்டிபாபு எம்.பி., அப்துல் காதர் எம்.பி., மேயர் காமாட்சி ஜெயராமன், துணைமேயர் என். வி. என். சோமு, அலமேலு அப்பாதுரை, சென்னை மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் துணைச் செயலாளர் சீதாபதி ஆகியோர் பங்கு பெற்றனர்; இவர்களுடன் போடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சுருளிவேலும் பங்கு கொண்டார்.

கைத்தறித் துணிகள் வைக்கப்பட்டிருந்த டிரக்குகளில் அமைச்சர் பேராசிரியர் அவர்களும்—மற்றவர்களும் நின்று மும்முரமாகத் துணி விற்பனை செய்தார்கள்.

பொதுமக்கள் போட்டி போட்டுக் கொண்டு கைத்தறித் துணிகளை வாங்கினார்கள்.

முதலாவதாகப் புரசைவாக்கம் குளத்திற்கு அருகில் விற்பனை தொடங்கியது; பிறகு பட்டாளம்—யானைக்கவுனி—திருவொற்றியூர் நெடுஞ்சாலை—இராயபுரம்—பாரிமுனை—குறளகம்—அமைந்தகரை—எழும்பூர்—இராயப்பேட்டை—மயிலாப்பூர்—மாம்பலம்—கோடம்பாக்கம் ஆகிய பகுதிகளிலும் துணி விற்பனை நடந்தது.

சைதைத் தொகுதியைச் சேர்ந்த கழகத் தோழர்கள் 'ஜீப்' ஒன்றில் முன்னதாகவே விற்பனையை ஊக்குவிக்கும் விளம்பரத்தைக் கோடம்பாக்கம் பகுதியில் செய்தனர்.

அந்தந்தப் பகுதிகளில்—அந்தந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்கள்—தி.மு.க. முன்னணியினர் கைத்தறி விற்பனையில் ஈடுபட்டனர்.

காஞ்சிபுரத்தில் என். வி. நடராசன்

அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் காஞ்சிபுரத்தில் கைத்தறித் துணி விற்பனை செய்தார். அவருடன் சி. வி. எம். அண்ணாமலை, சி. வி. இராசகோபால், கே. டி. எஸ். மணி ஆகியோர் உடன் சென்றார்கள்.

கைத்தறித் துணி விற்பனையைத் தொடங்கும் முன்னதாக அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள், முதலாவதாகப் பேரறிஞர் அண்ணாவின் இல்லம் சென்று அண்ணாவின் அன்னையாரை வணங்கினர்.

இதுபோல் ஒருமுறை நெசவாளர் துயர் போக்கும் பணியாகத் துணி விற்பனையைக் கழகம் ஆற்ற முன்வந்தபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள் தமது தோளில் சுமந்து சென்று தெருத் தெருவாக துணி விற்பனை செய்தார்.

அண்ணாவின் இல்லத்தில் கைத்தறித்தறி விற்பனை தொடங்கியபோது அண்ணாவின் குடும்பத்தார் ரூபாய் ரூ. 202 பெறுமானமுள்ள கைத்தறித் துணிகளை வாங்கினார்கள்.

சுமார் ரூ. 58,000 மதிப்புள்ள துணி விற்பனை ஆயிற்று.

மாலையில் கங்கைகொண்டான் மண்டபம் அருகே அமைச்சர் என். வி. என். அவர்களும் மற்றவர்களும் துணி விற்பனை நடத்திக்கொண்டிருந்தபோது, கற்களை வீசினர்; ஆனால் இதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

கோவையில் சத்தியவாணிமுத்து

கோவையில் அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் நகரின்

(4-ம் பக்கம் பார்க்க)

விலக்கப்படுவதைத் தவிர்க்க விலகிவிட்டார்

புதுக் கட்சி ஸ்தாபகர் அறிவிப்புக் குறித்து நாவலர்

'நிர்வாகம் சீர்குலைந்துவிட்டது' என்ற குற்றச்சாட்டுக்கு மறுப்பு

மதுரை, அக். 30—

"திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து எம். ஜி. இராமச்சந்திரன் விலகிவிட்டது பற்றிய செய்தியைப் பத்திரிகைகளில் பார்த்தேன்; அவருடைய விலகல் கடிதம் எனக்குக் கிடைக்கவில்லை; ஒருவேளை, கட்சி அலுவலகத்திற்கு அது வந்திருக்கக்கூடும்.

"தம்முடைய நடவடிக்கைக்கு விளக்கம் அளிப்பதற்காக இராமச்சந்திரனுக்கு அளிக்கப்பட்டிருந்த 15 நாள் கெடு, அக்டோபர் 25 ந் தேதி முடிவடைந்துவிட்டது; கட்சியிலிருந்து தாம் வெளியேற்றப்படக்கூடும் என்று அஞ்சி இராமச்சந்திரன் விலகியிருக்கக்கூடும்; இராமச்சந்திரனின் கடிதம் வந்ததும் இறுதி முடிவு எடுக்கப்படும்."

என்று பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இங்கு செய்தியாளர்களிடம் கூறினார்.

கேள்வி:—"இராமச்சந்திரன் நடவடிக்கையின் விளைவாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பல சம்பவங்கள் நடந்திருப்பதேன்?"

நாவலர்:—"இராமச்சந்திரன் பிரபல நடிகர்; அவருடைய ரசிகர்கள் கோபமடைந்திருக்கக்கூடும்; நடிகர் என்பதால் எம்.ஜி ஆருக்கு உள்ள செல்வாக்கை தி. மு. கழகம் மறுக்கவில்லை; அவர் செல்வாக்கு உள்ளவர் என்பது நாங்கள் எடுத்த நடவடிக்கைக்குக் காரணமல்ல; கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதற்காகத்தான் நடவடிக்கை எடுத்தோம்."

ரப்பர் ஸ்டாம்பு இல்லாமல் கட்டளைகள் செல்லுமா?

கேள்வி:—"நெடுஞ்செழியன் தி. மு. க.-வின் 'ரப்பர் ஸ்டாம்பு' என்று இராமச்சந்திரன் கூறியிருக்கிறாரே?"

நாவலர்:—"அவ்வாறு இருப்பது குறித்துப் பெருமைப்படுகிறேன்; பொதுச்செயலாளரின் முத்திரையோ அல்லது ரப்பர் ஸ்டாம்போ இல்லாமல் அனுப்பப்படும் கட்சியின் கட்டளையோ அல்லது சான்றேடுகளோ செல்லாதாகையால் நான் அவ்வாறு இருப்பது குறித்துப் பெருமைப்படுகிறேன்.

"கடந்த 25 ஆண்டுகளில் இதுபோன்ற கடுமையானவார்த்தைகளை நான் கேட்டிருக்கிறேன்; இருந்தபோதிலும், மக்களிடமிருந்து உரிய மரியாதையும்—மதிப்[illegible] எனக்குக் கிடைக்கிறது."

கேள்வி:—"[illegible]எம். ஜி ஆர். கட்சிக் கொடியி[illegible] அண்ணா உருவம் பொறி[illegible]டிருக்கிறதே?"

நாவலர்:—"இதுவரையில் எந்தக் கட்சியும் தன்னுடைய தலைவரின் படத்தைத் தன்னுடைய கொடியில் சேர்த்ததில்லை; கட்சிகள், தங்களுடைய சின்னங்களைத்தான் கொடிகளில் வைத்துக்கொள்ளும்; இதுபற்றி மக்களே முடிவு செய்வர் எனக் கருதுகிறேன்."

நிர்வாக இயந்திரம் சீர்குலைவா?

நிர்வாகத்தைப் புறக்கணித்துக் கட்சி வேலையையே அமைச்சர்கள் கவனிப்பதாக எதிர்க் கட்சிகள் கூறும் புகார்களைச் செய்தியாளர்கள் சுட்டிக்காட்டியபோது அமைச்சர் கூறியதாவது:—

"அண்மைக்கால அரசியல் சம்பவங்களால் மாநில நிர்வாக இயந்திரம் சீர்குலைந்துவிட்டது என்ற செய்திகள் தவறானவை—இட்டுக்கட்டப்பட்டவையாகும்; நிர்வாகம் சுமூகமாகவே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; குழப்பம் ஏதும் இல்லை."

மாநில அமைச்சர்களுக்குக் கூடுதலான போலீசும் பாதுகாப்பும் பற்றிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் கூறியதாவது:—

"முக்கியப் பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது போலீசாரின் கடமையாகும்; முந்திய அமைச்சரவைகள் பதவி வகித்தபோதும் இவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது; தலைமையமைச்சர் இந்திரா காந்திக்குக்கூட அதிக பட்சமாகப் போலீசுப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது."

கல்லூரிகள் பிரச்சினை

கல்வியமைச்சர் மேலும் கூறியதாவது:—

"மாநிலத்தின் சில பகுதிகளில் கல்லூரிகளும் பள்ளிக்கூடங்களும் மூடப்படுவதற்கு எம்.ஜி. ஆர். பிரச்சினை மட்டும் காரணமல்ல; மாணவர் சங்கப் போட்டியும்—தங்கும்விடுதிகள் வேண்டும் என்ற கோரிக்கையும் காரணங்களாகும்.

"மாணவர்கள் அரசியலிலிருந்து ஒதுங்கியிருக்க வேண்டும்; படிப்பு முடியும்வரையில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடலாகாது; அரசியலில் ஈடுபட்டுக் கிளர்ச்சிகளில் இறங்கினால் அவர்களுடைய படிப்புக் கெடும்."

எதிரிகளின் சூழ்ச்சிக்குப் பலியாகிவிடாதீர்

வேடதாரிகளின் முகத்திரை கிழியும் நாள் வெகுதொலைவில் இல்லை

மொழிப் போர்க்களம் கண்ட கழகமே நமது அமைப்பு

மாணவ மணிகளுக்[illegible] வேண்டுகோள் — நெல்லை மாவட்ட [illegible]. மா. மு. க. தீர்மானம்

நெல்லை மாவட்டத் தி. மா. மு. க. செயற்குழு உறுப்பினர் கூட்டம் 22—10—72-ல் மாவட்ட மாணவர் தி. மு. க. செயலாளர் திரு. வை. கோபால்சாமி தலைமையில் நடைபெற்றது.

பல்வேறு கல்லூரி, நகரக் கிளைகளின் பொறுப்பாளர்களான மாவட்டத் தி. மா. மு. க. செயற்குழு உறுப்பினர்கள்; மாணவர் தலைவர்களான இந்துக் கல்லூரி திருநாவுக்கரசு, விசுவநாதன்; மருத்துவக் கல்லூரி மாணவர் தலைவர் சேக்முகம்மது, இரவீந்திரன், தண்டபாணி, கணேசன், சவேரியர் கல்லூரி பரமசிவன், இசக்கிமுத்து; கடையம்நகர் சி. தமிழ்வென்றி, கடையநல்லூர் நயினார் முகம்மது; திருவைகுண்டம் அமைப்பாளர் சுப்பிரமணியன்; திருவை கல்லூரி தி. மா. மு. க. செயலாளர் செல்லப்பா, இராமமூர்த்தி, வெங்கடாசலம் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துக்களைக் கூறினர்.

நெல்லை மாவட்ட தி. மா. மு. க. அமைப்பாளர் திரு. வை. கோபால்சாமி தலைமைக்கழகம் எடுத்த முடிவினை விளக்கி உரையாற்றினர்.

பின்னர், கழக அரசுக்கு உறுதுணையாக நிற்கும் உறுதியுடன் கீழ்க்காணும் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன:—

1. தி. மு. கழகத் தலைமைச் செயற்குழுவும் — பொதுக்குழுவும் கழகப் பொருளாளர் எம்.ஜி.ஆர். மீது எடுத்த நடவடிக்கையை சனநாயகத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நியாயமான செயலெனத் தி. மு. கழகத்தின் துணையமைப்பான நெல்லை மாவட்டத் தி. மா. மு. க. ஏற்றுக்கொள்கிறது.

2. பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரைப் பயன்படுத்திக் கொண்டு — அறிஞர் அண்ணா உருவாக்கிய தி. மு. கழகக் கொடிக் கம்பத்தை வெட்டுவதும் இலட்சக்கணக்கான தொண்டர்களின் இரத்தம் சிந்திக் காக்கப்பட்ட — தமிழர் உயிருக்கும் மேலான கழகக் கொடிகளை எரிப்பதும், கழகத் தலைவர்களின் படங்களை உடைப்பதும் கழகத் தொண்டர்களின் செயலல்ல என்பதையும், கழகத்திற்குக் கல்லறை கட்ட நீண்டகாலமாகக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்த காலிகள் செயல் என்பதையும் நெல்லை மாவட்டத் தி. மா. மு. கழகம், தமிழ்ச் சமுதாயத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

3. மத்திய — மாநிலத் தி. மா. மு. க. அமைப்பாளராகக் கடந்த ஈராண்டுகளாக இந்தி எதிர்ப்புப் போராட்டக் களத்தின் தளபதி திரு. எல். கணேசன் செயல்பட்டுவருவதும் — அவர்தம் தலைமையில் மிகப் பெரும் மாணவர் மாநாட்டை நாம் கோவையிலே கூட்டியதும், நெல்லையிலும்கூட அவர்தம் துணையுடன் மாண்புமிகு. நாவலர் அவர்கள் முன்னிலையில் மாநில சுயாட்சி மாணவர் மாநாட்டை நடத்தியதும், மாநிலம் முழுதும் எல். கணேசன் அவர்கள் சுற்றுப்பயணம் செய்து அமைப்புகளை உருவாக்கியதும் கழக மாணவர்கள் அனைவருக்கும் நன்கு தெரியும்; எனவே அவர் தலைமையிலான தி. மா. மு. க. அமைப்பே உண்மையான மாணவர் தி. மு. கழக அமைப்பென்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

4. இப்பொழுது உருவாக்கப்பட்டிருக்கும் மாணவர் போராட்டம் ஏற்கனவே கழக அரசை எதிர்த்துப் போராட்டங்களை உருவாக்கி வந்த மாற்றுக்கட்சி மாணவர்களின் 'சதி நாடகம்' என்பதனைக் கழக மாணவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

5. 1965-ம் ஆண்டு மொழிப் போரில் தியாக வேள்வியையும்— இரத்தக் களறியையும் சந்தித்த மாணவர் சமுதாயத்தின் உரிமைக்குரலான இந்தி எதிர்ப்பை உருவாக்கியிருக்கின்ற அரசுதான் இந்த அரசு என்பதனால், இந்த அரசுக்கு உறுதுணையாக நிற்போம் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறோம்."

பொய்ச் செய்திக்கு 89-வது வட்டச் செயலாளர் மறுப்பு

சென்னை 89-வது வட்டம்—சிங்கராச்சாரி தெருவிலுள்ள எம் ஜி ஆர். மன்றச் செயலாளர் நெடுமாறன் செயற்குழுவைக் கூட்டி — செயற்குழு உறுப்பினர்களைக் கலந்தாலோசித்து — பின்னர்தான் இம் மன்றத்தைக் கலைத்தார்.

"இதைப் பற்றி 'தென்றல்' என்ற ஏட்டில், மன்றச் செயலாளர் நெடுமாறன் செயற்குழுவைக் கூட்டாமலே தன்னிச்சையாகக் கலைத்தார் என்று வெளிவந்துள்ள செய்தி முற்றிலும் தவறானதாகும்" என்று, வட்டச் செயலாளர் பொ. மாணிக்கம் அறிவிக்கிறார்.

'நாத்திகம்' ஏட்டின் பொய்ச் செய்தி

உத்திரமேரூர் வட்ட தி.மு. கழகச் செயலாளர் மறுப்பு

"உத்திரமேரூர் வட்ட தி. மு. கழகம் கலைக்கப்பட்டதாக 27—10—72 'நாத்திகம்' ஏட்டில் வந்துள்ள செய்தி பொய்யானதாகும்; அப்படி ஏதும் நடைபெறவில்லை.

உத்திரமேரூர் வட்ட தி.மு. கழகம், தி மு.க. தலைமைக்குக் கட்டுப்பட்டுச் செயல்படும் என்பதனை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்"

என்று, வட்டச் செயலாளர் கு. மு. இளங்கோ அறிவிக்கிறார்.

விஷமிகள் கோஷம் விரைவில் அடங்கும்

கலைஞரின் தலைமையில் கழகத்தைக் காப்போம்

சேலம் எம். ஜி. ஆர். ரசிகர் மன்றத் தலைவர் விலகல் அறிவிப்பு

சேலம், அக். 28—

சேலம் நகரத் தலைமை எம். ஜி, ஆர். ரசிகர் மன்றத் தலைவர் சுபாசு என்கிற ஜி. கே. கோவிந்தராசன் எம்.சி. அவர்கள், தமது தலைமைப் பதவியிலிருந்து விலகிக் கீழ்க்காணுமாறு அறிவித்துள்ளார்:—

"இலட்சக்கணக்கான தொண்டர்கள் — ஆயிரக்கணக்கான உடன்பிறப்புகள் — நூற்றுக்கணக்கான வழிகாட்டிகள் கொண்ட நமது இயக்கத்தின் முன்னோடும் தானைத் தலைவர் — கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், அவருடைய அரசியல் வரலாற்றில் அவர் அனுபவித்த கொடுமைகள் இந்த நாட்டு அரசியல்வாதிகள் ஏனையோர் அனுபவித்த கொடுமைக்குக் குறைவானதா? மறுக்கமுடியுமா?

கழகத் தலைமையை எதிர்க்கப் புறப்பட்டதாக எம். ஜி. ஆர். கூறினாலும், அது, கட்சியை எதிர்க்கத்தான் பயன்படும்.

அண்ணா அவர்களால் அமைக்கப்பட்ட கட்சியையும் — ஆட்சியையும் பாதுகாக்க என்னுடையவர்கள் தான் அண்ணா வழியில் வந்தவர்களாவர்; அவர்களுக்குக் கடமை ஒன்று உண்டு: அதுதான், டாக்டர் கலைஞர் அவர்களின் கரத்தை வலுப்படுத்துவது.

அந்தவகையில், கழகக் கட்டுப்பாட்டை மீறியதாக எம்.ஜி.ஆர், மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை சரியானதே என ஒப்புக்கொள்வதுடன், நடவடிக்கை எடுத்த தலைமைக் கழகத்தின் அறிவிப்பை முழுமனதுடன் வரவேற்கிறேன்.

நான் கழகத்தின் கடைசித்தொண்டனாக வாழ்வதில் பெருமையடைகிறேன்; எனவே, நான் வகித்துவந்த சேலம் நகர எம் ஜி. ஆர். தலைமை மன்றத் தலைவர் பொறுப்பினை இராஜினாமா செய்துவிடுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலமெங்கும் மாற்றார்களால் தூண்டிவிடப்பட்ட விஷப் புயல் சேலம் நகரைத் தாக்காவண்ணம், என் வேண்டுகோளுக்கிணங்கி ஒத்துழைத்த தொண்டர்களுக்கும்— தோழர்களுக்கும், தாய்மார்களுக்கும் பெரியோர்களுக்கும் என் பணிவான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

கோயபல்சுகளின் புரட்டுச் செய்தி

கோபி நகரச் செயலாளர் மறுப்பு

கோபி, அக். 17—

கோபி நகர தி.மு.க. செயலாளர் ஜி. ஆர். பழனியப்பன் அறிவிப்பதாவது:—

"கழகத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையை எந்த வழியிலும் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளக் கழகத் தோழர்களையே பிரித்தாளும் சூழ்ச்சியினைக் காங்கிரசு வட்டாரத்தினர் மேற்கொண்டுள்ளனர்; அதன் ஒரு வழியாகத்தான் 'அலை ஓசை' போன்ற பத்திரிகைகளில் பொய்ச் செய்திகளை வெளியிட்டு மற்றவர்களுக்கு ஏற்படுத்துகின்ற பிரமையின் மூலம் காரியம் சாதிக்கலாம் என்று காங்கிரசு வட்டாரத்தினர் கருத்துக்கொண்டு செயல்படுகின்றனர்.

இதற்கு உதாரணமாக வெளியூர் 16–10–72-ம் நாள் 'அலை ஓசை'ப் பத்திரிகையில் பக்கம் 4 — பத்தி 4-ல், 'கோபியில் எம் ஜி.ஆர். ரசிகர்கள் 3,000 பேர் ஊர்வலமாக வந்து கலைஞரின் கொடும்பாவி எரித்தனர்' என்று செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் கண்டுள்ளபடி கோபி நகரில் எந்த ஊர்வலமும் நடைபெறவுமில்லை — கொடும்பாவி எரிக்கப்படவும் இல்லை.

இதேபோல், தமிழகம் முழுவதிலும் உள்ள ஊர்ப் பெயர்கள் அனைத்தையும் காட்டிப் பொய்ச் செய்திகளை வெளியிட்டு அதனால் அரசியல் இலாபம் பெற நினைக்கும் 'அலை ஓசை'ப் பத்திரிகையின் ஈனப்புத்தியை வன்மையாகக் கண்டிக்கிறோம்; இதுபோன்ற செய்திகளைக் கழக நண்பர்கள் யாரும் ஒருபோதும் நம்ப வேண்டாமெனவும் கேட்டுக் கொள்கிறோம்."

நம்மால் செழித்தவர் நம்மையே பழித்தார்

துரோகியின் பின் செல்லத் துணியோம்

அவினாசி கழகத் தோழர்கள் சூளுரை

அவினாசி வ[illegible] எம்.ஜி.ஆர். மன்றச் செயற்குழுக் கூட்டம் 19-10-72-ல் [illegible]ற்றபோது, இன்றுமுதல் எம்.ஜி.ஆர் மன்றத்தைக் கலைத்[illegible]வதெனவும், உறுப்பினர்கள் அனைவரும் கிளைக் கழகத்தில் இணைந்து செயல்படுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

எம். ஜி. ஆர். மன்றம் கலைக்கப்படுவதையொட்டி மன்றத் தலைவர் இரா. சதாசிவமுத்து—செயலாளர் க. அ. கத்திவேல்—துணைச் செயலாளர் க. ஈசுவரன் ஆகியோரும் மற்றும் செயற்குழு உறுப்பினர்களும் வெளியிட்ட அறிக்கை வருமாறு:—

"பேரறிஞர் அண்ணா தலைமையில் தன்னலம் கருதாத் தியாகிகள் தங்கள் உடலையும் உயிரையும் துச்சமெனக் கருதிச் செங்குருதி சிந்தியும், சிறை சென்றும் வளர்த்தக் கழகத்தை, நம்மால் செழித்தவர் — வாழ்வினில் உயர்ந்தபின் நம்மையே பழித்தவரின் பின்செல்ல ஒருபோதும் ஒப்போம்.

எங்கள் கடைசிச் சொட்டு இரத்தம் உள்ளவரையில், கலைஞரின் பின்நிற்போம்.

கழகத்திற்குச் சோதனை வருகின்றபோதும், நம் நெஞ்சுக்கு வேதனை தருகின்றபோதும், நம் கண்ணான கழகத்தை உடைக்க முனைகின்றபோதும் நமது குடும்பத் தலைவன் — கட்டுப்பாட்டை வளர்த்த இறைவன் பேரறிஞர் அண்ணா காட்டிய — எதையும் தாங்கும் இதயத்தோடு கலைஞர் பின் அணிவகுத்துச் செல்வோம்.

இன்று முதல் நாங்கள் கருவலூர் தி. மு. க. கிளையில் இணைந்து கழகத்திற்குத் தூய தொண்டாற்றுவோமென உறுதி கூறுகிறோம்."

துரோகத்துக்குத் துணைபோனவர் பதவி விலக வேண்டும்

கிருஷ்ணராயபுரம் கழகத் தோழர்கள் குமுறல்

கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவரும். பஞ்சப்பட்டி தி. மு. க. செயலாளரும், பஞ்சப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவருமான மா. ஆண்டியப்பன் அறிவிப்பதாவது:—

"கிருஷ்ணராயபுரம் தொகுதியிலிருந்து கழகச் சார்பாகச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் பெ. சௌந்தரபாண்டியன் கழகத்திலிருந்து விலகிக் கழகத்திற்கு எதிரான தனி மனிதரொருவரின் ஆதரவாளராக இருக்க விரும்புவதாக இதழ்களில் செய்தி வெளியிடப்பட்டிருப்பதைத் தொகுதியின் கழகத் தோழர்கள் கண்டு வியப்படைந்தோம்.

அவருடைய வெற்றிக்காக இரவு—பகல் பாராமல் மாற்றுக் கட்சியினரின் தொல்லைகளையும் — எதிர்ப்புகளையும் தாங்கிக் கொண்டு, 'அங்கு கழகம் வெற்றி பெறவேண்டும்' என்கின்ற ஒரே நோக்கத்துடன் தேர்தல் காலத்தில் உழைத்த எங்களுக்கு தோழர் சௌந்தரபாண்டியன் அவர்களின் அறிவிப்பு வேதனையளிக்கிறது.

கழகத்தின் நிழலில் — கழகத்தினரின் உழைப்பில் பெறப்பட்ட இந்தப் பதவியை கழகத்திலிருந்து வெளியேற வேண்டுமென்ற முடிவுக்கு வருகிற எவரும் உதறித் தள்ளுவதுதான் முறை — சனநாயக மரபு — அரசியல் நாணயம்!

எனவே அவர், உடனடியாகத் தமது சட்டமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டுமென்று தொகுதி தி. மு. கழகத்தினரின் சார்பில் வேண்டுகிறேன்."

குறிஞ்சிப்பாடி எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம் கலைப்பு

குறிஞ்சிப்பாடி எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றம் கலைக்கப்பட்டது; அந்த அமைப்பின் செயலாளர் வை. தண்டபாணி அறிவிப்பதாவது:—

"கழகக் கட்டுப்பாட்டைக் குலைக்கும் வகையில் நடந்துகொண்ட எம்.ஜி.ஆர். மீது கழகம் எடுத்துள்ள ஒழுங்கு நடவடிக்கையை எங்கள் மன்றம் முழுமனத்துடன் வரவேற்பதுடன், கழக நடவடிக்குப் பிறகும் அவரது பேச்சும் — செயலும் கழகத்தையே குலைக்கும் விதமாக அமைந்திருப்பது கான நாங்கள் பெரிதும் உள்ளம் வருந்துகிறோம்.

தனி மனிதருக்காக நாங்கள் என்றுமே செயல்பட்டதில்லை; இனியும் செயல்படப்போவதில்லை.

எங்கள் உள்ள உறுதியை எடுத்துக் காட்டும் அடையாளமாக எங்கள் எம் ஜி.ஆர். ரசிகர் மன்றத்தைக் கலைத்துவிட்டு — இனி தனி அமைப்பே தேவையில்லை எனத் தீர்மானித்து உள்ளூர் (குறிஞ்சிப்பாடி) நகர தி.மு.கழகத்தில் இணைந்துவிடுவதென முடிவு எடுத்து எங்கள் அமைப்பினைக் கலைத்துவிட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

சென்னை 10-வது வட்ட எம்.ஜி.ஆர். மன்றம்

டாக்டர் கலைஞர் மன்றம் என மாற்றப்பட்டது

சென்னை—வண்ணை 10-வது வட்டம் கிழக்குக் கல்லறைச் சாலையிலுள்ள எம் ஜி. ஆர். மன்றம் கலைக்கப்பட்டு, 'டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி நற்பணி மன்றம்' என்று அமைக்கப்பட்டது.

திரு. க. சற்குணம் தலைமையில் — திரு. த. வெங்கடேசன், வட்டச் செயலாளர் மை. அன்பு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்தலில், திரு நடராசன் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

எம். ஜி. ஆர். இரவுப் பள்ளி பெயர் மாற்றம்

சென்னை 10-வது வட்டம் அண்ணா அறிவு வளர்ச்சி மன்றத்தைச் சேர்ந்த மக்கள் திலகம் எம் ஜி ஆர். இரவுப் பள்ளியின் பெயரை, 'திருவள்ளுவர் இரவுப் பள்ளி' என மாற்ற முடிவு செய்யப்பட்டது

25—10—72-ல் மன்றச் செயலாளர் வி. டி. சாரதி தலைமையில் மேற்கண்ட முடிவு மேற்கொள்ளப்பட்டது

தலைமைக் கழகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கவும், கடமை — கண்ணியம் — கட்டுப்பாடு காத்து கலைஞரின் கரத்தை வலுப்படுத்தவும் அண்ணா அறிவு வளர்ச்சி மன்றத் தோழர்கள் உறுதி எடுத்தனர்.

சென்னை 24-வது வட்ட எம். ஜி. ஆர். பொதுப் பணி மன்றம் பெயர் மாறியது

சென்னை 24-வது வட்டத்தில் இயங்கிவந்த எம் ஜி ஆர். பொதுப் பணி மன்றம் கலைக்கப்பட்டது.

கழகத் தொண்டர்களின் மனம் புண்படும்படியாகப் பேசிக் கழகத்தை மாற்றாருக்குக் காட்டிக் கொடுக்கும் வகையில் நடவடிக்கைகளில் இறங்கி இன்று தமிழகமெங்கும் கழகத்தை ஒரு பிரச்சினைக்குரியதாக செய்துவிட்டுத் தனிக் கட்சி துவங்கியுள்ள தனி மனிதரான எம். ஜி. ஆரின் செயலைக் கண்டித்தும், கழகம் மேலிடத்து நடவடிக்கைகளை ஆதரித்தும் இம்மன்றம் கழகத்தைக்காக்க உயிர்கொடுத்த உத்தமன் தூத்துக்குடி மாவீரன் கே. வி. கே. சாமி நினைவு மன்றம்' என்றும், 'அண்ணா இரவும் பள்ளி' என்றும் இயங்குமென மன்றத் தலைவர் ஏ. சி. பெரியசாமியும் செயலாளரும் மற்றும் மன்ற உறுப்பினர்களும் ஏகமனதாக 22—10—72 அன்று நடந்த மன்றக் கூட்டத்தில் முடிவு செய்து அறிவித்துள்ளனர்.

கழகத்தைக் காப்போம்

பெங்களூர் தி. மு. க. தோழர்கள் உறுதி

பெங்களூர் — இலக்குமணபுரி தி மு. க. கிளையின் பொது உறுப்பினர் கூட்டம், 22—10—72-ல் அவைத் தலைவர் வி. அண்ணாமலை தலைமையில் நடைபெற்றது.

அதுபோது, திரு. எம். ஜி. இராமச்சந்திரன்மீது தலைமைக் கழகம் எடுத்த நடவடிக்கையை விளக்கித் தலைவர் உரையாற்றியபின், தோழர்கள் ஆர். முனுசாமி, ஏ. சுப்பிரமணி, ம. கிருஷ்ணமூர்த்தி, வி. சீனிவாசன், ஜி. பாலு, என். செயராமன், ஆர். நடராசன், ஜி. எஸ். அண்ணியப்பன், ஜே. வி. விந்தன், வே மகிழரசன், ஜி கண்ணன், சி. வெங்கடசாமி மற்றும் கழகத் தோழர்கள் இன்றுள்ள நிலையில் கழகத்தைக் கட்டிக் காக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்; பேரறிஞர் அண்ணா வழியில் நின்று கடமையாற்ற வேண்டுமெனச் சூளுரை ஏற்றனர்.

கலைஞர் கரத்தை வலுப்படுத்த முடிவு

19–10–72-ல், சிவகாசி கலைஞர் மு. கருணாநிதி மன்றச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது; அதுபோது, கீழ்க்காணும் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன:—

கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய எம் ஜி ஆர். மீது தலைமைக் கழகம் எடுத்த நடவடிக்கையை இம் மன்றம் வரவேற்கிறது.

கலைஞர் தலைமையில் இயங்கும் தி. மு. கழகத்தில் தொடர்ந்து பணியாற்றுவது என உறுதி மேற்கொள்கிறது.

எம்.ஜி.ஆர். ரசிகர்கள் வன்முறைக்குக் கண்டனம்

சென்னை 24-வது வட்டம் ஆரார் அண்ணா நினைவு மன்றப் பொது உறுப்பினர்கள் 32 பேர் கூடி, அண்மையில் எம்.ஜி ஆர். தொடர்பாகத் தலைமைக் கழகச் செயற்குழு — பொதுக்குழு எடுத்த நடவடிக்கையைப் பாராட்டியும், வன்முறைகளில் ஈடுபட்டுள்ள எம் ஜி. ஆர். ரசிகர்கள் — விஷமிகளின் போக்கைக் கண்டித்தும், கழகத்தை என்றும் கண் இமைபோல காத்திடவும், பொதுமக்களுக்கு உழைத்திடவும், கழக அரசை வலுப்படுத்திடவும் உறுதி மேற்கொண்டனர்.

சேலம் 11-வது வட்டம் எம். ஜி. ஆர். மன்றம் கலைப்பு

சேலம், அக். 23—

சேலம் புதிய 11-வது வட்டம்—நரசிம்ம ரெட்டியார் பாலத எம்.ஜி. ஆர். மன்றச் செயலாளர் எஸ் எம். எம். பாலன் — துணைத் தலைவர் ஆர். கந்தசாமி — பொருளாளர் எஸ். முத்து ஆகியோர் அறிவிப்பதாவது:—

"இந்தப் பகுதியில் எம்.ஜி ஆர். பெயரால் ஒரு மன்றம் அமைத்து 8 ஆண்டுகளாகப் பொதுப் பணியாற்றிவந்தோம்.

அண்மையில் எம்.ஜி ஆர். கழகக் கட்டுப்பாட்டை மீறிச் செயல்பட்டுவருவதால் அவருடைய பெயரால் இயங்கிவந்த எம். ஜி ஆர். மன்றத்தைக் கலைத்துவிட்டு, 'டாக்டர் அறிஞர் அண்ணா படிப்பகம்' என்று மாற்றியமைத்துத் தீவிரமாகச் செயல்படுவோம் என்று இதன் மூலம் அறிவித்துக் கொள்கிறோம்."

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தில் நட்டம்

நெய்வேலி, அக். 28—

நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்க நிர்வாகத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் நெய்வேலித் திட்டம் நட்டத்தில் இயங்குவதாக கூறப்பட்டிருக்கிறது.

சென்ற ஆண்டில் (1971-72) ஏற்பட்ட மொத்த நட்டம் ரூ. 45 85 கோடி என்றும், நடப்பு ஆண்டில் (1972-73) ரூ. 14 62 கோடி நட்டம் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

நாங்கள் இருவரும் ஒருவரே!

சென்னை, அக். 28—

"எந்த ஒரு பிரச்சினையானாலும், அதற்காக ஆளுநரை நாட வேண்டும் — நாடுகிறார்கள் என்ற செய்திகளைப் பத்திரிகைகளிலே பார்க்கின்ற நேரத்தில், 'நம்மைத் தாண்டி அவர்களிடத்திலே போகிறார்களே' என்கின்ற எண்ணம் எனக்கு ஏற்படுவதில்லை; காரணம், 'பிரச்சினைகள் பற்றி அவரிடம் சென்றாலும் ஒன்றுதான் — என்னிடம் வந்தாலும் ஒன்றுதான்' என்று கருதுகின்ற அளவுக்கு நானும் — அவரும் ஒன்றாகப் பழகிக் கொண்டிருக்கிறோம் என்பதுதான்!

"ஆகவே, இனிமேலாவது தோழர்கள், அவரிடத்திலே தருகின்ற மனுக்கள் என்னிடத்திலே தரப்படுகின்ற மனுக்களைப் போலத்தான் என்று கருதுவார்களென நம்புகிறேன்."

—முதலமைச்சர் கலைஞர்

(ஆளுநர் கே. கே. ஷா பிறந்த நாள் விழாவில்)

எடுத்துக்காட்டாக விளங்குகிறோம்

சென்னை, அக். 28—

"மக்களிடம் நான் வேறுபாடு பாராட்டாமல் பழகுவதாக என்னைப் பாராட்டினார்கள்; அதனாலேயே மக்கள் தங்கள் குறைகளைப் பற்றிய மனுக்களை என்னிடம் தரலானார்கள்; அதை, நான் தொடர்புடையவர்களுக்கு அனுப்பி வைப்பேன்; அண்மையில் வந்த சில மனுக்களைக்கூட முதலமைச்சரிடமே நேரில் சேர்க்கும்படி நான் சொல்லியிருக்கிறேன்.

"நானும் முதல்வரும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டிருக்கிறோம்; எனக்கும் — முதல்வருக்கும் உள்ள உறவு மிக உயர்ந்த — போற்றுதற்குரியதாக இருக்கிறது.

"ஒரு மாநிலத்தின் ஆளுநருக்கும் — ஒரு முதல்வருக்கும் இருக்கவேண்டிய உறவுக்கு நாங்கள் இருவருமே மிகச் சிறந்த எடுத்துக்காட்டு ஆவோம்."

—ஆளுநர் கே. கே. ஷா

(பிறந்த நாள் விழாவில்)

சிதம்பரம் தி. மு. க. பொதுக்கூட்டம்

தலைமைக் கழக பொதுக்குழு — செயற்குழுத் தீர்மான விளக்கப் பொதுக்கூட்டம் 22—10—72-ல் சிதம்பரம் டவுன் ஆலில், திரு. ப. சௌரிராசன் எம். சி. தலைமையில் நடைபெற்றது.

தீர்மானங்களை விளக்கி திரு. கி' செல்வராசன், இரெ. கிருஷ்ணமூர்த்தி, நகர்மன்ற உறுப்பினர்கள் கே. ஆர். கணபதி, சுந்தரமூர்த்தி, சி. பி. கனகசபை, மாயாமச்சந்திரன் மற்றும் மாவட்டப் பிரதிநிதி இரா. சக்ரவர்த்தி, தமிழரசுக் கழகம் பா. சுப்பையன், புலவர் முத்து, தமிழரசன், நகர அவைத் தலைவர் இரெ. சுப்பிரமணியம், துணைச் செயலாளர் இராம. முத்துக்குமரன், பொருளாளர் துரை, பாலசுப்பிரமணியம், வட்ட துணைச் செயலாளர் வீரமணி, வட்டச் செயலாளர் கி. ப. மணி. இரத்தின பாலதருசாமி, செ. பெருமாள் எம்.எல். ஏ., வி. மாயவன் எம்.பி. ஆகியோர் பேசினர்.

செயலாளர் சு. கோவிந்தராசன் நன்றி கூறினார்.

தொழிலில் சரிவு — அதனை ஈடுசெய்ய 'ஸ்டண்ட்' அடிக்கிறார் எம். ஜி. ஆர்.

மதுரை, அக். 26—

"சில நாட்களுக்குமுன் கட்சியில் இல்லாத வேகமும் விறுவிறுப்பும் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது

நமது மதிப்புக்குரிய கலைஞரை 'சர்வாதிகாரி' என்கிறார் எம். ஜி. ஆர்.; ஆனால் அவர்தான் சர்வாதிகாரியாக நடந்துகொண்டிருக்கிறார்; இலட்சிய நடிகர் எஸ். எஸ் ஆர்., பட உலகில் முன்னேறிவரும் நேரத்தில் அவருக்கு வீழ்ச்சியை ஏற்படுத்தியவர் இவர்!

மின் விளக்கின் குமிழ்ப்பகுதி (பல்பு) பியூஸ்' ஆகிவிட்டால் தூக்கியெறிந்து விடுகிறோம்; அரசியலில் 'பியூஸ்' போனவராகிவிட்ட எம். ஜி. ஆர். அவர்களுக்கும் இந்நிலை ஏற்பட்டிருப்பதில் வியப்பில்லை!

தொழிலை முதலாவதாகவும் — அரசியலை இரண்டாவதாகவும் வைத்திருந்தார் அவர்! எனவே, தொழிலில் ஏற்பட்ட சரிவை ஈடுகட்ட 'ஸ்டண்ட்' அடிக்கிறார்!

அவரை, 'வைரம்' என்று புகழ்ந்து வந்தோம்; ஆனால் அவர், 'நான் வெறும் கூழாங்கல் என்பதை மெய்ப்பித்து விட்டார்; அந்தக் காட்சியைத்தான் மக்கள் இன்று காண்கின்றனர்!"

— எம். இராஜாங்கம்

(மதுரையில் நடைபெற்ற தி. மு. க. பொதுக்குழுத் தீர்மான விளக்கப் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரையில்)

'தவறான' கொள்கையை தமிழக அரசு ஏற்காது

'மறைமுக உத்தரவு ஏதுமில்லை'

முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

சென்னை, அக். 29—

"கேரள முதல்வர் அச்சுத மேனன், 'தமிழ்நாட்டில் அரசாங்க அலுவலகங்களிலும் — தனியார் நிறுவனங்களிலும் — தொழிற்சாலைகளிலும் மலையாளிகளை வேலைக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது என்று தமிழக அரசு மறைமுகமாக உத்தரவு போட்டிருக்கிறது' என்று சொல்லியிருக்கிறாரே — அதுபற்றி உங்கள் கருத்து என்ன?'

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் செய்தியாளர்கள் வினவியபோது, முதல்வர் கூறியதாவது:—

"அதுமாதிரி ஏதுமில்லை; 'மற்ற மாநிலத்துக்காரர்கள் ஒரு மாநிலத்தில் இருக்கக்கூடாது' என்கின்ற கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை' 'மலையாளிகளையோ — ஆந்திரத்துக்காரர்களையோ — வேறு மொழி பேசுகின்றவர்களையோ வேலைக்குச் சேர்த்துக்கொள்ளக்கூடாது' என்கின்ற நேர்முக உத்தரவோ — மறைமுக உத்தரவோ அல்லது அதுமாதிரி யோசனைகளோகூட சொல்லப்படவில்லை.

"மேற்கு வங்கத்திலும், மைசூரிலும் இதுபோல் ஒரு இயக்கம் இருப்பதை அச்சுத மேனன் கண்டித்துப் பேசிய கருத்து எங்களுக்கு உடன்பாடானதுதான்."

அரசின் பலம் நூலிழையில் இல்லை

செய்தியாளர்:—"13-ந் தேதி சட்டமன்றம் கூடுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறதே—நிகழ்ச்சி நிரல் என்ன?"

முதல்வர்:—"மின்சார வாரிய பட்ஜெட் வரும்; சில மசோதாக்களும் வரும்."

செய்தியாளர்:—"எம். ஜி. ஆர். விலக்கப்பட்டதைத் தொடர்ந்து சில எம்.எல்.ஏ.-க்களும் மாறியிருப்பதால், 'தி. மு. கழகத்துக்கும் பலமிருக்கிறது' என்பதை நிரூபிக்க, 'நம்பிக்கை இருக்கிறது' என்பதைக் கோரும் தீர்மானப் கொண்டுவரப்படுமா?"

முதல்வர்:—"சட்ட மன்றத்தில் மசோதாக்கள் வருகின்றன; அதிலேயே தெரிந்துவிடும்."

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்:—"கடந்த சட்டமன்றக் கூட்டத்தில்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்ததே!"

முதல்வர்:—"நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்று பார்த்துக்கொள்ள அரசின் தரப்பிலேயே ஒரு தீர்மானம் கொண்டுவருகின்ற அளவுக்கு இந்த அரசின் பலம் நூலிழையில் என்றும் இல்லை."

செய்தியாளர்:—"மாநில சுயாட்சி பற்றித் தீர்மானம் வருமா?"

முதல்வர்:—"அலுவல் ஆய்வுக் குழுவில் அதுபற்றி முடிவு எடுக்கப்படும்."

ஏதாவது எழுதித் தீரவேண்டுமே!

செய்தியாளர்:—"பக்தவத்சலம் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறாரே; 'தி. மு. க.-வுக்குப் பிரளயம் வந்துவிட்டது' என்றும், மதுவிலக்குப் பிரச்சினை பற்றியும் எழுதியிருக்கிறார்; மேலும், 'கட்சித் தலைவர் வருத்தம் தெரிவித்துவிட்டால் எம். ஜி. ஆர். கட்சியில் சேரலாம்' என்றும் தெரிவித்திருக்கிறாரே!

முதல்வர்:—"மதுவிலக்குப் பற்றி நிறையச் சொல்லியாகிவிட்டது."

நாவலர்:—"ஏதாவது எழுதித் தீர வேண்டும் என்று அவர் எழுதுகிறார்."

சுயேச்சை எம்.எல்.ஏ.-க்கள் கழகத்தில் சேர்ந்தனர்

முதலமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:—

"தமிழகத்தில் சுயேச்சை எம்.எல்.ஏ.-க்களாக இருக்கின்ற காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, குழ செல்லையா ஆகிய இருவரும் தங்களை தி மு. கழகத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று விடுத்த வேண்டுகோளைத் தலைமைக் கழகம் பரிசீலித்து — இருவரையும் தி. மு. கழகத்தில் சேர்த்துக்கொள்வதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது."

செய்தியாளர்:—"இருவரும் கழகக் கூட்டணி வேட்பாளர்களுக்கு எதிராகப் போட்டியிட்டவர்களா?"

முதல்வர்:—"இருவரும் அதற்காக வருத்தம் தெரிவித்துக் கொண்டார்கள்."

எத்தனையோ தடவை அப்படிச் சொல்லியிருக்கிறார்

செய்தியாளர்:—"ஒரு மாதத்தில் தி மு. கழக ஆட்சி கவிழ்ந்துவிடும் என்று காமராசர் பேசியிருக்கிறாரே — அதற்கு ஏதாவது அறிகுறி தெரிகிறதா?"

நாவலர்:—"எத்தனையோ தடவை காமராசர் இப்படிச் சொல்லியிருக்கிறார்."

முதல்வர்:—"காமராசர் சொல்வதையெல்லாம், 'நினைக்கிறார்' என்று பொருளல்ல!"

உதவிப் பேராசிரியையின் தியாக உணர்வு

வன்முறையாளர்களைத் தலை குனிய வைத்தார்

சண்டிகர், அக். 28—

அரசு பஸ் ஒன்றைக் கிளர்ச்சிக்காரர்கள் எரிக்காமல் தடுக்கத் தனது உயிரையும் பலி கொடுக்க முன்வந்த உதவிப் பேராசிரியை டாக்டர் சீதா சர்மாவைப் பாராட்டி பஞ்சாப்முதலமைச்சர் ஜெயில் சிங் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்; அவருக்கு இரண்டு ஊதிய உயர்வுகளும் கொடுத்திருக்கிறார்.

கடந்த புதன் கிழமையன்று அந்தப் பேராசிரியை ஏறிச் சென்ற பஸ்சை வழிமறித்து — அதைத் தீ வைத்துக் கொளுத்துவதற்காகப் பயணிகள் அனைவரையும் கிளர்ச்சிக்காரர்கள் இறங்கச் சொன்னார்கள்; டாக்டர் சீதா சர்மா இறங்க மறுத்துவிட்டார்; 'இது அரசாங்கச் சொத்து; இதை எரிக்க வேண்டுமானால் என்னையும் சேர்த்து எரித்துவிடுங்கள்' என்று அவர் கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

கிளர்ச்சிக்காரர்களுக்கு வெட்கமாகப் போய்விட்டது; பேசாமல் திரும்பிப் போய்விட்டார்கள்; பஸ் எந்தவிதமான சேதமும் இல்லாமல் தப்பியது.

"இது, பிரமிக்கத்தக்க தைரியம்; மிகச் சிறந்த முன்னுதாரணம்" என்று முதலமைச்சர், தமது பாராட்டுக் கடிதத்தில் கூறியிருக்கிறார்.

சொந்தக் கட்சியினரை விசாரணைக்கு உட்படுத்தத் தயாரா?

அறிவுரை கூறுவோர் வழிகாட்டியாக இருக்க வேண்டும்

குமாரமங்கலம் --- ஒட்டுக் காங்கிரசு ஸ்தாபகர் கூற்றுகளுக்குக் கலைஞர் தரும் பதில்

சேலம், அக். 29—

சேலத்திற்கு வந்திருந்த முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்துச் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும்--முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு :-

கேள்வி :—"கைத்தறி விற்பனை எப்படி யிருக்கிறது?"

பதில் :—"சேலம் நகரத்தில் ரூ 4 இலட்சத்திற்கு விற்பனையாகி யிருக்கிறது. சேலம் மாவட்டம் முழுவதிலும் ரூ 10 இலட்சத்திற்கு விற்பனையாகி யிருக்கும் என்று கருதுகிறேன்."

கேள்வி :—"மாநிலம் முழுவதிலும் எவ்வளவு விற்பனையாகி யிருக்கும் ?"

பதில் :— "கிட்டத்தட்ட ரூ. 50 இலட்சத்திற்கு விற்பனையாகி யிருக்கிறது."

கேள்வி :—"வறட்சி நிவாரண நிதிக்கு ஏதாவது பணம் அனுப்பப்பட்டிருக்கிறதா?"

பதில் :—"மத்திய அரசுக் குழு வந்து பார்த்துவிட்டுச் சென்றிருக்கிறது."

கேள்வி :—"சேலம் நெசவாளர் பிரச்சினைபற்றி ஏதாவது கலந்து பேசப்படுமா?"

பதில் :—"இதுபற்றி அமைச்சர் மாதவன் இங்கே வந்து பேசி யிருக்கிறார்."

கேள்வி :—"மோகன் குமாரமங்கலம், கழக அரசின்மீது மக்களுக்குப் பரவலான ஓர் எண்ணம் இருப்பதாதவும், ஆக நீதி விசாரணை வைப்பது நல்லதாக இருக்கும் என்றும் சொல்லியிருக்கிறாரே ?"

பதில் :—"எப்படி நீதி விசாரணை வைப்பது என்றும் அவர்களே சொல்லவேண்டும்; அவர்கள் இதுவரையில் எப்படி வைத்தார்கள் என்பதையும் பார்க்கவேண்டும்; பூனாவில் நடந்த ஸ்தாபனக் காங்கிரசு செயற்குழுக் கூட்டத்தில், மத்திய அரசின்மீதுஇலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக் கூறியிருக்கிறார்கள்; ஆகவே அதற்கு எப்படி நீதிவிசாரணை செய்யப் போகிறார் -- எப்படி விசாரணையை வைக்கிறார் என்று பார்த்து அதுபோல் வைக்கலாம் ; எம். ஜி. ஆர்.கூட நீதி விசாரணை கேட்டிருக்கிறார் ; அவரும் -- அவரைச் சார்ந்த ஐந்தாறு சட்டமன்ற உறுப்பினர்களும் ஆளும் கட்சியில் பொறுப்பில் இருந்த காலத்திற்கு அவர்கள், தங்களை நீதி விசாரணைக்கு உட்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும்.

"உலகத்துக்கு அறிவுரை சொல்கின்றவர்கள் அவர்களே வழிகாட்டிகளாக இருந்து காட்டவும் முன்வர வேண்டும்; அவர்கள் தங்களை விசாரிக்கச் சொல்லி முன்வந்தால் எப்படி நீதிபதி நியமிப்பது என்று முடிவு எடுக்கலாம்."

அமைச்சர்கட்குப் போலீசு பாதுகாப்பு

கேள்வி :—"தமிழ்நாட்டில் என்ன நடக்கிறது--மக்கள் மனோபாவம் எப்படியிருக்கிறது என்று பார்க்கத்தான் தமிழ்நாட்டுக்கு வந்தேன் என மோகன் குமாரமங்கலம் கூறியிருக்கிறாரே ! 'அமைச்சர்கட்குப் போலீசுப் பாதுகாப்புக் கூடாது' என்று கூறியிருக்கிறாரே !"

பதில்:—"தலைமையமைச்சர் கூட்டம் நடக்கிறபோது போலீசுப் பாதுகாப்பு தரவேண்டியதாய் இருக்கிறது; அப்படி வேண்டாமென்று பகிரங்கமாக மோகன் குமாரமங்கலம் சொல்லிவிட்டால் நல்லது; அண்மையில்கூட வடக்கே தலைமையமைச்சர் பேசிய கூட்டத்தில் கலவரம் நடந்திருக்கிறது; ஆகவே, அமைச்சர்கட்கு அப்படிப் பாதுகாப்புத் தரவேண்டியிருக்கிறது."

மதுவிலக்குப் பிரசாரம்

கேள்வி :— "மதுவிலக்குப் பிரசாரக் குழு தீவிரமாக வேலை செய்ய வேண்டாமென்றும், ஓராண்டு கழித்து அந்தக் குழு பிரசாரத்தில் ஈடுபடலாம் என்றும் நீங்கள் கூறியதாக எம். ஜி. ஆர். கூறியிருக்கிறாரே !"

முதல்வர் :— "அப்படி நான் சொல்லவில்லை; சொல்லுவதாக இருந்தால், முன்கூட்டி அந்தக் குழுவை அமைத்திருக்கவேமாட்டேன்."

கேள்வி :—"இனி அந்தக் குழுவிற்குப் புதிய தலைவரை நியமிப்பீர்களா ?"

முதல்வர் :—"எம்.ஜி ஆர். அவர்களே மதுவிலக்குப பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபடுவார் என்று நான் நம்புவதால், அதற்கு ஒரு 'டூப்ளிகேட்' வேண்டாம் என்று கருதுகிறேன்."

மண்டல மக்கட் தொடர்பு அதிகாரிகள்

கேள்வி :—"பி.ஆர்.ஓ (மண்டல மக்கள் தொடர்பு அதிகாரிகள்) எல்லா மாவட்டத்திலும் நியமிக்கப்படுவார்களா? அவர்களுடைய வேலைகள் வரையறை செய்யப்படுமா ?"

முதல்வர் :—"அவர்களுடைய வேலைகள் வரையறை செய்யப்பட்டிருக்கின்றன ; மண்டல மக்கள் தொடர்பு அதிகாரிகளை மற்ற மாவட்டத்துக்கு விரிவு படுத்துவது பற்றி யோசிக்கலாம்."

மாணவர் அமைதியின்மை

கேள்வி :—"மாணவர்களிடையே நிலவிவரும் அமைதியின்மையைப் போக்கப் 'பெற்றோர் -- மாணவர்கள் குழு' ஒன்றை அமைத்து அமைதிகாண முற்படலாமே !"

முதல்வர் :—"நல்ல யோசனை ; பரிசீலிக்கிறேன்."

ஆவன செய்யப்படும்

கேள்வி:—"உள்ளாட்சி வளர்ச்சி அலுவலர்கள் கோரிக்கைகளைத் தந்தார்களே -- அது பற்றி என்ன முடிவெடுத்திருக்கிறீர்கள் ?"

முதல்வர் :—"அதிகாரிகள் மட்டத்தில் அவை ஆலோசிக்கப்படும்."

மின்சாரப் பற்றாக்குறை

தொடர்ந்து செய்தியாளர்களின் மின்சார வெட்டும் பற்றிய கேள்வியை எழுப்பியபோது முதல்வர் கூறியதாவது :—

"நெய்வேலியில் நமக்குப் போதிய மின்சாரம் கிடைக்கவில்லை ; 250 மெகாவாட் மின்சாரம் கிடைத்துவந்தது ; இப்போது 40—50—70 மெகாவாட் என்கிற விகிதத்தில்தான் கிடைக்கிறது.

"நெய்வேலி மற்றி மத்திய அரசு மேலும் கவனம் செலுத்த வேண்டும் ; குந்தா மின்சார உற்பத்தி நிலையத்திலிருந்தும் போதிய மின்சாரம் கிடைக்கவில்லை ; இதுபற்றி 31-ந் தேதி முடிவெடுக்கப்படும்."

தமிழ்நாடு சட்டமன்றம்

நவ. 13-ல் கூடுகிறது

சென்னை, அக். 30—

வரும் நவம்பர் 13-ம் நாள் காலை 10-மணிக்குத் தமிழ்நாடு சட்டமன்றம் கூடுகிறது ; இந்தக் கூட்டத் தொடர் ஒரு வாரம் அ[illegible]து 10 நாட்கள் நடைபெறும்.

சட்டமன்ற மேலவையும் நவ. 13-ம் நாள் மாலை [illegible]மணிக்குக் கூடுகிறது.

சட்டமன்றத் தொடரில், மின்சாரத்துறை வரவு—செலவுத் திட்டம், அரசாங்க மசோதாக்கள், துணை மானியக் கோரிக்கை ஆகியவைமீது விவாதம் நடைபெறும்.

கடலூரில் கண்சிகிச்சை முகாம்

இதுவரை 275 பேருக்கு அறுவைச் சிகிச்சை

கடலூர், அக். 30—

தென் ஆற்காடு மாவட்டம் கடலூர் புதுநகர் டவுன் ஆலில் நிறுவப்பட்ட இலவசக் கண்சிகிச்சை முகாமில் நேற்று டாக்டர்கள் ஆபிரகாம் -- வேணுகோபால் குழுவினர், 148 பேர்களுக்குக் கண் அறுவைச் சிகிச்சை செய்தனர்.

100 ஆண்களும் -- 48 பெண்களும் இந்த வசதியைப் பெற்றனர் ; இன்னும் கண் அறுவைச் சிகிச்சை நடைபெறுகிறது.

கண் சிகிச்சை முகாமில் பெயர்ப் பதிவு செய்துகொண்ட 1,236 பேர்களில் 275 பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டியிருக்கிறது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

31--10--72

முள்ளிப்பாடி

தி. மு. க. சார்பில் மாலை 7-30 மணிக்கு ஆரோக்கியசாமி நகரில் ; தலைவர் : க. சுந்தரம் ; பேசுவோர் : நன்னிலம் நடராசன், க. வே. விக்கிரமாதித்தராசன், மு. காதர்சா, க. நாகராசன் எம்.எல் ஏ., பொன். சீனிவாசன், இரா. முனியப்பன், து. இராமலிங்கம், ஓ. என். சிவஞானம், வி. எஸ். இலட்சுமணன், அ. தங்கவேலு எம்.சி., என். முத்து மற்றும் மலர்.

திட்டக்குடி

நகர தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு காந்தியார் திடலில் ; தலைவர் : மு. கோவிந்தன ; பேசுவோர் : அமைச்சர் என். வி. நடராசன், எம். செல்வராசு எம். எல்.ஏ., கே. ஜெ மாலை எம்.எல். ஏ., திரு. இர சவேலு, டி. பி. தங்கராசு. புரு. பத்மநாபன், ஆர். சோமசுந்தரம், வி. இராமநாதன், கே. டி. சீரங்கனார், தி. கொ. சிங்காரம்.

கைத்தறியாளர் துயர் துடைக்கக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல்வேறு பகுதிகளில் கைத்தறித் துணி விற்பனையைத் துவக்கி வைத்தார்.

மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ். ஏ. இராசமாணிக்கம், சட்டமன்ற -- நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினர்களும், அமைச்சருடன் பங்கேற்றனர்.

பரமக்குடியில் மாதவன்

பரமக்குடியிலும் -- அருப்புக் கோட்டையிலும் அமைச்சர் செ. மாதவன், எஸ். எஸ். தென்னரசு எம்.எல்.சி. ஆகியோர் இப்பணியில் ஈடுபட்டனர்.

பொள்ளாச்சியில் எஸ்.ஜே. சாதிக்பாட்சா

அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள், பொள்ளாச்சியிலும் -- உடுமலையிலும் கைத்தறி ஆடை விற்றார்.

நெய்வேலியில் எஸ். இராமச்சந்திரன்

நெய்வேலியில் அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் கைத்தறித் துணி விற்பனையைத் தொடங்கி வைத்தார் ; மக்கள் ஆர்வமுடன் துணிகள் வாங்கினர்.

ஈரோடு -- திருப்பூரில் மு. கண்ணப்பன்

இங்கு அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்கள், கைத்தறித் துணி விற்பனையைத் தொடங்கி வைத்தார்.

திருச்சியில் அன்பில் தர்மலிங்கம்

திருச்சி சிந்தாமணியில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு இன்று திருச்சி நகரில் கைத்தறி விற்பனையை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் தொடங்கிவைத்தார்.

அவருடன் கழக முன்னணியினர் பலரும் விற்பனையில் பங்கு பெற்றார்கள்.

சிந்தாமணி ரோடிலிருந்து தொடங்கிய துணி விற்பனை பாலக்கரை வெல்லமண்டி -- பெரிய கடைவீதி ஆகிய இடங்களில் தொடர்ந்து நடைபெற்றது. ரூ. 50,000 மதிப்புள்ள துணிகள் விற்பனை ஆயிற்று.

தஞ்சையில் மன்னை நாராயணசாமி

அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்கள் தஞ்சை நகரில் கைத்தறித் துணி விற்பனையைத் தொடங்கினார்.

அவருடன் சட்டமன்ற உறுப்பினர்கள் இளங்கோவன், எஸ். நடராசன், தஞ்சை நகராட்சித் தலைவர், பெத்தண்ணன, துணைத் தலைவர் சுல்தான், ஊராட்சித் ஒன்றியத் தலைவர் தங்கமுத்து, மாவட்ட தி.மு.க. செயலாளர் பொறுப்பிலுள்ள இராசன் ஆகியோரும் துணிவிற்பனையில் கலந்து கொண்டனர்.

பாண்டு வாத்தியங்களுடன் அலங்கரிக்கப்பட்ட டிரக் ஒன்றில் கட்டுக் கட்டாகத் துணிகளுடன் அமைச்சரவர்களும் மற்றும கழகப் பிரமுகர்களும வீதி வீதியாகச் சென்று துணிகளை விற்றனர்.

தஞ்சை இரயில் நிலையம் அருகேயிருந்து விற்பனை வண்டி புறப்பட்டு இர்வின் பாலம் வரையில் பல்வேறு வீதிகளிலும் முனைகளிலும் விற்பனைகள் நடைபெற்றன.

தர்மபுரியில் இராசாராம்

பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் க. இராசாராம அவர்கள் தலைமையில் தர்மபுரியில கைத்தறி விற்பனை தொடங்கிற்று.

அலங்கரிக்கப்பட்ட டிரக் ஒன்றில் கைத்தறித் துணிகளை தர்மபுரி நகரத் தெருக்களில் விற்பனைக்காகக் கொண்டுவந்தனர் ; அந்த டிரக்கில் அமைச்சர் இராசாராம் அவர்களும் மற்றும் கழகப் பிரமுகர்களும், நாடாளுமன்ற-- சட்டமன்ற உறுப்பினர்களும் விற்பனையில் கலந்துகொண்டனர்.

தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் பத்மநாபன் துணி விற்பனையைத் துவக்கிவைக்கும் வகையில் ரூ. 150 பெறுமானமுள்ள கைத்தறி துணிகளை வாங்கினார்.

அவரைத் தொடர்ந்து பிரமுகர்களும்--பொதுமக்களும் போட்டி போட்டுக்கொண்டு துணிகள் வாங்கினார்கள்.

ரூ. 50,000 மதிப்புள்ள துணிகள் விற்பனையாயின.

வேலூர் -- ஆரணியில் ப. உ. சண்முகம்

அமைச்சர் ப.உ. சண்முகம் அவர்கள், ஆரணியில் கைத்தறித் துணி விற்பனையைத் தொடங்கி வைத்தார்.

அலங்கரிக்கப்பட்ட டிரக் ஒன்றில் கைத்தறித் துணிகள் கட்டுக் கட்டாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

பொதுமக்கள் அதிக ஆர்வத்தோடு துணிகளை வாங்கினர் ; ரூ.30,000 மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனையாயின என்று தெரிகிறது.

மாலையில் வேலூரில் அமைச்சர் ப. உ. சண்முகம் கைத்தறித் துணிகளை விற்றபோது ரூ. 1,50,000 மதிப்புள்ள துணிகள் விற்பனை ஆயிற்று.

திண்டுக்கல்லில் ஓ. பி. இராமன்

திண்டுக்கல், அக். 29—

அமைச்சர் ஓ பி. இராமன் அவர்கள் திண்டுக்கல் நகரில் கைத்தறி விற்பனை செய்தார்.

அவர் சென்ற இடங்களிலெல்லாம் மக்கள் அலை அலையாகக் கூடிக் கைத்தறி ஆடை வாங்கினர்.

கைத்தறித் துணிகளை வாங்குவதில் ஆண்களைவிடத் தாய்மார்கள் அதிக ஆர்வம் காட்டினர்.

நெல்லையில் ஆதித்தனார்

நெல்லையில் கைத்தறித் துணி விற்பனை தொடக்க விழா, நெல்லையப்பர்கோவில் முன்பு நகராட்சித் தலைவர் சூரியநாராயணன் தலைமையில் நடந்தது.

ரூ. 1,001 மதிப்புள்ள கைத்தறித் துணிகளை, அம்பை ஒன்றியத் தலைவர் இராசலிங்கராஜாவிடம் கொடுத்து, கூட்டுறவு அமைச்சர் சி. பா. ஆதித்தனார் விற்பனையைத் தொடங்கிவைத்தார்.

பிறகு, கப்பல்போல் அலங்கரிக்கப்பட்ட அலங்கார ஜீப் காரில் ஆதித்தனார் வீதி வீதியாகத் துணி விற்பனை செய்தார்.

கைத்தறிச் சேலையைத் தோளில் போட்டுக்கொண்டு, 'சேலையை வாங்குங்கள்' என்று ஆதித்தனார் கூவி விற்றார் ; ஆண்களும்--பெண்களும் போட்டி போட்டுக் கொண்டு கைத்தறித் துணிகளை வாங்கினர்.

நெல்லை நகரசுத்தித் தொழிலாளர்களுக்காக ரூ. 3,000 மதிப்புள்ள கைத்தறித் துணிகளை சூரிய நாராயணன் வாங்கினார்.

நகராட்சிப் பூங்கா முன் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தபின், துணி விற்பனையை ஆதித்தனார் முடித்து வைத்தார்.

நாகர்கோவிலில் பாரூக்

நாகர்கோவிலில் புதுவை முதலமைச்சர் எம். ஓ. எச். பாரூக் அவர்கள் துணி விற்க வந்தபோது பொதுமக்கள் உற்சாகத்துடன் வரவேற்றனர்.

திரு. எம். ஓ. எச். பாரூக் அவர்களுடன் எம். சி. பாலன் எம்.பி., இராசாப்பிள்ளை எம். எல். ஏ., எம். இராசகோபால் ஆகிய தோழர்கள் உடனிருந்து விற்பனை செய்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் [illegible] இங்கு வெளியிடப்படுகிறது.